**தலைப்பு 161 – நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 161 – நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 11 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களித்தன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.5(அ) |
| | | 2. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | 2.6 |
| | | 3. பெறுகைகள் திட்டமிடாமை | 2.2.1 |
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. முகாமைத்துவ பலவீனங்கள் | 2.4 |
| | | 2. இணக்கமின்மைகள் | 2.7 |
| | | 3. மனித வள முகாமைத்துவத்தில் பலவீனங்கள் | 2.8 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | 1. பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள குறைபாடுகள். | 2.2 |
| | | 2. செயற்பாடுகளை நிறைவேற்றாமை | 2.1.1 |

| | | | |
|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. நிதி மற்றும் தொழிற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் வாகனப் பயன்பாட்டில் குறைபாடுகள். | 2.3 (ஆ) |
| | | 2. விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டு சொத்துக்கள் காணப்படல். | 2.3 (இ) |
| | | 3. ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல். | 2.3(ஊ) |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை. | 2.1.2 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.5(ஆ)(i) |
| | | 2. மிகை நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை. | 2.5(ஆ) (ii) |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொட்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் | நிதியுடன் தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களை பெற்றுக் கொள்ளப்படாமை. | 2.9 |

பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும்.

## 2 பொருண்மையானதும் முக்கியத்துவமுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

### 2.1.1 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை.

**(அ) நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கான ஆயத்தம்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 இன் 19 ஆம் இலக்க இலங்கை நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்திலுள்ள குறிக்கோள்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்களை அடைந்துகொள்வதற்காக நிலைபேறான அபிவிருத்திச் சபை தோற்றுவிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அது தொடர்பாக நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) நிலைபேறான 17 அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அவை சார்ந்த 169 துணை இலக்குகளை உள்ளடக்கிய இந்த தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித் திட்டத்தை 2030 ஆண்டளவில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் இக்காலப் பகுதியை உள்ளடக்கி உரிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு இயலுமான வகையில் ஒரு கூட்டிணைந்த திட்டம் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அவ்வாறே இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அரசாங்க நிறுவனங்களைத் தொடர்புபடுத்தும் பொறுப்பு இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிறுவனங்களின் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு எடுக்கப்பட்டிருந்த செயற்பாட்டு மதிப்பீடு சம்பந்தமாக முறையான நடவடிக்கை கணக்காய்வுத் திகதியான 2018 யூன் 25 ஆந் திகதிவரை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறாகும்.

(i) புத்தளம் ஒன்றிணைந்த சுற்றுலா அபிவிருத்தி திட்டம்

சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதன் மூலம் பிரதேசத்திலுள்ள மக்களை வலுப்படுத்துதல், பிரதேசத்தில் உயிரியல் பல்லினப்படுத்தலை மேம்படுத்தல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக் கவர்ச்சியை மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தை 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பித்து 2018 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மதிப்பீடுசெய்யப்பட்ட தொகை ரூபா 500 மில்லியனாகும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் போது இதற்காக ரூபா 2.5 மில்லியன் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிதி ஏற்பாட்டிலிருந்து 26 விழிப்பூட்டல் பலகைகளைப் பொருத்துவதற்கும் விழிப்பூட்டல் கைப்பத்திரிகைகளைப் பகிர்ந்தளிப்பதற்காகவும் ரூபா 2.46 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

(ii) வடமாகாண ஒருங்கிணைந்த சுற்றுலா அபிவிருத்தி திட்டம்

பிரதேசத்தில் சுற்றுலா வளமுள்ள இடங்களை இனங்கண்டு சுற்றுலா கைத்தொழிலை மேம்படுத்துவதன் மூலம் மக்களை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திடடத்தை 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டிற்கு ரூபா 5 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 03 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் 02 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்துதல் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக உபகரணங்களைப் பகிர்ந்தளித்தல் என்பன மாத்திரம் இடம்பெற்றிருந்ததுடன் அதற்காக ரூபா 2.65 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

### 2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 மே 31 ஆந் திகதி வரையும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

### பெறுகைகளைத் திட்டமிடல்

அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 59.45 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 27.29 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு சம்பந்தமாக தயாரிக்கப்பட வேண்டிய பெறுகைத் திட்டம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) பெறுகைகளைத் திட்டமிடலும் தொடக்க ஆயத்தப்படுத்தலும்**

இக்கட்டத்தின் கீழ் பின்வரும் திட்டங்களும் ஆவணங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) பெறுகைப் பக்கேஜ் பொழிப்பு

(ii) தொடக்க பெறுகைத் திட்டம்

**(ஆ) பெறுகை நடைமுறையை அமுல்படுத்துதல்**

2017 செப்தம்பர் 20 ஆந் திகதி நிரந்தர படம் எடுப்பதற்காக ரூபா 578,100 பெறுமதியான ஒரு கமராவைக் கொள்வனவு செய்வதற்கு விலை மனுக்களை கோரும் போது ஒரு வழங்குனர் மாத்திரம் விலை மனுவைச் சமர்ப்பித்திருந்தும் கேள்வி குறிப்புக்களில் இல்லாத ஒரு வழங்குனருக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பினவரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்களை பதிவேட்டில் பதிதல்**

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசனத் தொடர்பு அமைச்சின் கீழுள்ள கொம்ட்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமான தகவல்கள் காட்டப்பட்டிருந்தும் அச்சொத்துக்களின் பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நிதி குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைப் பயன்படுத்துதல்**

அமைச்சினால் நிதி குத்தகை முறைமையின் கீழ் 06 வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் உரிய வாகனங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் குத்ததை தவணைப் பணக் கொடுப்பனவுகள் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

**(இ) விளைவற்ற மற்றும் குறையாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்குச் சொந்தமான 04 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

**(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு இந்த அறிக்கையை 2018 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2018 யூலை 05 ஆந் திகதி வரை அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வெளித்தரப்பிணர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அமைச்சினால் 02 ஜீப்களும் 02 கெப் வாகனங்களும் வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்களை வழங்கிய நிறுவனம் | வாகனத்தின் வகை மற்றும் எண்ணிக்கை | |
|---|---|---|
| சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | ஜீப் | 02 |
| சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | கெப் | 01 |
| சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சு | கெப் | 01 |

**(ஊ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாக சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தல்**

அமைச்சினால் ஏனைய அமைச்சுக்களுக்குச் சொந்தமான ரூபா 28.9 மில்லியன் பெறுமதியான 06 வாகனங்கள் முறையான அனுமதியின்றி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் ஒதுக்கீட்டுக் கணக்கில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களின் ரூபா 294.04 மில்லியன் கிரயத்துள் அவ்வாகனங்களின் பெறுமதியும் உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு | வாகனங்களின் வகையும் எண்ணிக்கையும் | பெறுமதி |
|---|---|---|
| சுற்றுலா மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | 01 ஜீப் வண்டி | 6.00 |
| அரசாங்க முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 01 கார் | 4.80 |
| பாராளுமன்ற விவகார அமைச்சு | 01 கெப் | 6.00 |
| உயிரியல் பூங்கா, பொழுதுபோக்கு மற்றும் பொது விவகார அமைச்சு | 01 கார் | 7.50 |
| அரசியலமைப்பு விவகார மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு | 02 கார் | 4.60 |
| | | 28.90 |

**2.4 முகாமைத்துவ பலவீனங்கள்.**

(அ) முறையான ஆய்வினை மேற்கொள்ளாமலும் தேவைப்பாட்டை இனங்கண்டு கொள்ளாமலும் நிலைபேறான அபிவிருத்திக் கருது கோலை பகிரங்கப்படுத்துவதற்காக ரூபா 4.5 மில்லியன் செலவு செய்து 100,000 புத்தகங்களும் 200,000 ஞாபகக் குறிப்பிதழ்களும் அச்சிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அவற்றில் ரூபா 1,245,000 பெறுமதியான 20,000 புத்தகங்களும் 178,000 குறிப்பிதழ்களும் 2018 யூன் மாதம் 25 ஆந் திகதி வரை பயன்படுத்தப்படாது காணப்பட்டன.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 02 வாகனங்களுக்கு புதிய ஆசனங்களைப் பொருத்துவதற்காக ரூபா 350,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் கழற்றி அகற்றப்பட்ட ஆசனங்களின் பெறுமதியைக் கழித்து அச்செயற்பாட்டை

நிறைவேற்றுவதற்கு திருத்த வேலைகளை மேற்கொண்ட நிறுவனத்துடன் இணங்கியிருந்தனர். எவ்வாறாயினும், உரிய மதிப்பீடுகளில் அது உள்ளடக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 1991 ஆகஸ்ட் 14 அந் திகதி வனசீவராசிகள் பணிப்பாளர் மற்றும் தனது தரப்பினர்களால் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் தோற்றுவிக்கப்பட்ட வனசீவராசிகள் நம்பிக்கைப் பொறுப்பின் இறுதிக் கணக்குகளும் நிதி அறிக்கைகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 03 ஆண்டுகள் காலத்தில் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்பாடுகள் சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் அவை தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாகப் சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2015 | மீண்டுவருபவை | 100.70 | 91.15 | 9.55 | 9.4 |
| | மூலதனம் | 16.93 | 12.14 | 4.79 | 28.2 |
| | மொத்தம் | 117.63 | 103.29 | 14.34 | 12.1 |
| 2016 | மீண்டுவருபவை | 174.36 | 166.31 | 8.05 | 4.6 |
| | மூலதனம் | 100.17 | 57.11 | 43.06 | 42.9 |
| | மொத்தம் | 274.53 | 223.42 | 51.11 | 18.6 |
| 2017 | மீண்டுவருபவை | 177.82 | 174.22 | 3.60 | 2.0 |
| | மூலதனம் | 59.45 | 27.30 | 32.15 | 54 |
| | மொத்தம் | 237.27 | 201.52 | 35.75 | 15 |

**(அ) பாதீட்டினைத் தயாரித்தல்**

மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்படாமையின் காரணமாக 20 செலவு விடயங்களிலிருந்து 13 சந்தர்ப்பங்களின் போது ரூபா 18,909,100 தொகையான மதிப்பீடு அடிக்கடி நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை.**

01 செலவு விடயத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 25,000,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ii) மிகை நிதி ஏற்பாடு வழங்கியமை**

5 செலவு விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு வழங்கியமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அச் செலவு விடயங்களுக்கான தேறிய நிதி ஏற்பாட்டில் 26 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது. அவ்வாறே 03 செலவு விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்கு நிதி ஏற்பாட்டை மாற்றம் செய்ததன் பின்னரும் ரூபா 3,367,667 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**2.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினனால் கீழே தரப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | உரிய நிதிப் பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அடியிதழ் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(அ) | நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | விலைமனுக் கோரல் பதிவேடு | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் பந்தி | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | சேதங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள். |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | 2017 ஆம் ஆண்டின் போது இடம் பெற்ற 09 வாகன விபத்துக்கள் தொடர்பாக தொடக்க அறிக்கைகளும் சேதம் ஏற்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கைகளும் அமைச்சினால் |

| | | |
|---|---|---|
| | | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 1642 | 2017 ஆம் ஆண்டில் இடம் பெற்ற 05 விபத்துக்கள் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு பொலிஸ் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 25/95 ஆம் இலக்க சுற்றறிக்கை. | அமைச்சிற்குச் சொந்தமான அனைத்து குழாம் வாகனங்களிலும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2006 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | 10 வாகனங்கள் சம்பந்தமாக சம்பவக் குறிப்பு மற்றும் ஓட்ட அட்டவணை முறையாக நாளது வரையாக்கப்படாததுடன் எரிபொருள் நுகர்வு சிக்கனமானதா என்பது பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.8 மனித வள முகாமைத்துவம்**

**2.8.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி ஊதிபங்களுக்கான செலவு.**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த, உள்ள படியான வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி ஊதிய செலவுத் தொகுதிக்காக ரூபா 78,627,975 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 836,468 ஆக இருந்தது.

| | **ஊழியர் வகை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 21 | 17 | 04 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 03 | - |
| **(iii)** | இரண்டாம் மட்டம் | 51 | 41 | 10 |
| **(iv)** | ஆரம்ப மட்டம் | 31 | 30 | 01 |
| **(v)** | ஏனையவை (அமையம் / தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 109 | 94 | 15 |

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

**ஆளணியினரைப் பயிற்றுவித்தல்**

உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கையான 94 நபர்களில் 37 நபர்களுக்கு எதுவித பயிற்சி சந்தர்ப்பமும் கிடைத்திருக்கவில்லை.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்கள் பிணை வைத்தல்**

அரசாங்கத்தின் நிதி, வருமானம் முத்திரை அல்லது பொருட்களைப் பொறுப்பேற்றல் அல்லது அவற்றுக்குப் பொறுப்பாக இருத்தல் அவ்வாறு இல்லாவிடின் அரசாங்கத்தின் பணத்தை பகிர்ந்தளித்தல் அல்லது முத்திரை, பொருட்களை விநியோகித்தல் சம்பந்தமாக நிர்வாக ரீதியாக பொறுப்புக்கூறக்கூடிய அல்லது அதிகார ஒப்படைப்பின் கீழ் அச்செயற்பாடு

ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களும் அரசாங்க கணக்கிற்குரிய வவுச்சர்களை சான்றுபடுத்துகின்ற நபர்களும் சுயமாக கடமைகளை நேர்மையாக நிறைவேற்றுவதாக 612 ஆம் அத்தியாயமான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைத்திருக்க வேண்டிய போதிலும் அமைச்சினால் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.